அந்தச் சாலையில் 2 கிலோ மீட்டர் சரியில்லாத காரணத்தால், சமீபத்தில் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட காரணத்தாலே, அந்தச் சாலையைப் போட்டவுடன் பேருந்துகளை விடுவதாக, ஆர்.எம்.டி.சி. நிர்வாகம் கூறியது. அதனுடைய அடிப்படையில் இப்போது பொதுப்பணித்துறையும் அந்தச் சாலைகளைச் செப்பனிடுவதற்காக டெண்டர்களை விட்டு, வேலைகளும் நடந்து கொண்டு இருக்கின்றன. அந்த வேலைகள் முடிந்தவுடனேயே அந்தப் போக்குவரத்து விடப்படும் என்றாலும்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது இந்த உறுதியை அளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இன்னும் கூடுதலாக இரண்டு நடைகளை விரைவிலே விடுவதற்கும், அதற்கு மேலும் கடவூருக்கு அடுத்து இன்னும் பத்து கிலோ மீட்டர் செல்லவேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கேட்பதால், அதனையும் நீட்டித்துத் தர ஆவன செய்வார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசில் திங்கள்கிழமையே அமல்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 87, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

87—

ஏழுவனம்பட்டி கண்மாய்க்கு தண்ணீர் நிரப்புதல்

***19590**—*திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

பெரியகுளம் தொகுதி, தேவதானப்பட்டி அருகில் நிலக்கோட்டைத் தொகுதி, ஏழுவனம்பட்டிக்கு மேல்புறம் மஞ்சளாறு ராஜ வாய்க்காலில் வரும் தண்ணீரை ஒரு வாய்க்கால் வெட்டி, ஏழுவனம்பட்டி கண்மாயில் நிரப்ப அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1995 மார்ச் 24]

மஞ்சளாறு ராஜா வாய்க்காலின் ஆயக்கட்டு நிலங்களுக்கே போதிய தண்ணீர் வழங்க இயலாத நிலையில் அதில் மேலும் ஆயக்கட்டுகளை சேர்ப்பதற்கான வாய்ப்புகள் இல்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சளாறு ராஜாவாய்க்காலில் மழைக் காலங்களில் தண்ணீர் அதிகமாக ஓடி, பொம்மநாய்க்கன்பட்டி கண்மாயில் விழுந்து அப்படியே வைகையில் போய்க் கலந்து விடுகிறது. பொதுவாக அந்த ஏரியாவில் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இருப்பதில்லை. ஏழுவனம்பட்டி என்பது மிகப் பெரிய கிராமம். நெசவாளர்களும், விவசாயிகளும் நிறைந்த கிராமம். ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு கால்வாயை வெட்டி, அந்தத் தண்ணீரை அந்தக் கண்மாயில் நிரப்பினால் குடிநீருக்காவதுப் பயன்படுமே என்றுதான் இந்தக் கேள்வியைப் போட்டேன். எனவே அதை மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சளாறு ராஜாவாய்க்காலில் ஏறத்தாழ 2,002 ஏக்கருக்கு மேலேயே பாசனவசதி பெற்ற ஆயக்கட்டுகள் இருக்கின்றன. இந்த வாய்க்காலில் ஆயக்கட்டுகளாகச் சேர்க்கப்பட்டுள்ள இடங்களில், கடைமடைப் பகுதியில் உள்ள நிலங்களுக்கும் தண்ணீர்விடப் போதுமான தண்ணீர் இல்லாத காரணத்தாலேதான், புதிய ஆயக்கட்டுகளைச் சேர்ப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று தெரிவித்தேன். தற்போது பதிவு செய்திருக்கிற ஆயக்கட்டுகளுக்கே நாம் தண்ணீர் கொடுப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகளை மிகவும் சிரமத்துடன் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, புதிதாக தண்ணீர் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த ஏரியாவுக்குப் பாசன வசதிக்குத் தணணீரைக் கேட்கவில்லை என்பதை மீண்டும் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு வாய்க்காலை வெட்டுவதன்மூலம், அந்தக் கண்மாயில் தண்ணீரைத் தேக்கினால், அந்தப் பகுதியில் உள்ள கிணறுகளில் குடிநீருக்கான ஊற்றுகள் கிடைக்கும். அதன்மூலம் அங்குள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்ற அந்த ஆதங்கத்திலேதான் கூறுகிறேன். ஆகவே பாசனத்திற்கு என்று கேட்கவில்லை, குடிப்பதற்காவது தண்ணீர் அங்கே கிடைக்க ஒரு முயற்சியை எடுப்பார்களா என்பதை மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சளாறு அணைக்கட்டுப் பாசனம் சம்பந்தமாக ஏற்கெனவே ஒரு வழக்கு உயர்நீதிமன்றத்திலே நடந்தது. அதிலே புதிய ஆயக்கட்டுகள் சேர்க்கப்படக்கூடாது என்று உயர்நீதிமன்றத் தீர்ப்பும் இருக்கிறது. பழைய ஆயக்கட்டுகளுக்குப் போதுமான தண்ணீர் வழங்கப்பட்டபின்புதான், புதிய ஆயக்கட்டுகளுக்குத் தண்ணீர் கொடுக்கவேண்டுமென்ற நிலை இருக்கிறது. ஆகவே, குடிநீர்ப் பிரச்சினை என்பது இப்போது எழவில்லை. ஏற்கனவே இருக்கிற ஆயக்கட்டுகளைத் தவிர மற்றவைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்றால், அது உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை மீறிக் கொடுப்பதாகும். ஆகவே அந்தப் பிரச்சினையும் இருக்கிறது. ஆகவே தற்போது அதை அரசு பரிசீலிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 88, திரு. ஏ. ரவிக்குமார், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

88—

பொன்னேரி தொகுதியில் நெடுஞ்சாலையை அகலப்படுத்துதல்

***22409**—*திரு. ஏ. ரவிக்குமார்:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பொன்னேரி தொகுதியில், பொன்னேரி முதல் பழவேற்காடு வரையிலும், மீஞ்சூர் முதல் பழவேற்காடு சாலை வரையிலும் நெடுஞ்சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : அத்தகைய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஏ. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொன்னேரி தொகுதியில் கடந்த காலங்களில் குண்டும் குழியும், சேறும் சகதியுமாக இருந்த பொன்னேரி நெடுஞ்சாலையை 1 அடி 2 அடி என்று உயர்த்தி, சென்னை மவுண்ட் ரோடு போன்று சீர் செய்து தந்தும், தார்ச்சாலையையே பார்த்திராத கிராமங்களுக்கெல்லாம்